**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,**
**TIRUVANNAMALAI.**
**SESSIONS CASE NO. 161/2018**
**Deposition of Witness for : PW.7**

**Name** : திரு. கார்த்திக்
**Father Name** :
**Village** :
**Taluk** :
**Caste** :
**Calling** :
**Religion** :
**Age** :

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 28-02-2022.**

**முதல் விசாரணை -**

நான் தற்போது வன்னிய நகரம் சு. வாளவெட்டியில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியாது. வழக்கு குறித்து எனக்கு எதுவும் தெரியாது. என்னிடம் காட்டப்படும் 1ம் எதிரி சத்தியமூர்த்தி ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாக சொல்லப்படும் முதல் கையெழுத்து என்னுடையது தான். அந்த கையெழுத்தை வெறையூர் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து போட்டேன். அந்த கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.3. மேலும், கைப்பற்றுதல் மகஜரில் உள்ள கையெழுத்தும் என்னுடையது தான். அதையும் காவல் நிலையத்தில் வைத்து தான் போட்டேன். அந்த கையெழுத்து அ.சா.ஆ.4. என்னுடன் ராஜா என்பவரும் கையெழுத்து போட்டார். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு வழக்கறிஞர் இந்த சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வேண்டி, அனுமதிக்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.**

போலீசார் என்னை 19.6.2017 மாலை சுமார் 4 மணியளவில் வன்னிய நகரம் பேருந்து நிலையத்தில் போலீசார் 1ம் எதிரியை கைது செய்து விசாரணை செய்து கொண்டிருந்தார்கள் என்றும் நான் சென்று பார்த்த போது போலீசார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க 1ம் எதிரி தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும், ராஜா என்பவரும் கையெழுத்து இட்டோம் என்றும் அதனை சுமார் 4 முதல் 5 மணியளவில் ஆய்வாளர் பதிவு செய்தார் என்றும், அதன் பிறகு 1ம் எதிரி பயன்படுத்திய மரத்தடியை பொரிக்கல் கிராமம் திருமலை என்பவரின் கிணற்று மேட்டில் மறைத்து வைத்திருந்த 2 மரத்தடிகளை எடுத்து ஆய்வாளரிடம் கொடுத்தார் என்றும், அதனை ஆய்வாளர் 5.45 - 6.15 மணிக்கு மகஜரில் கைப்பற்றினார் என்றும், நானும் ராஜாவும் 1ம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் கையெழுத்து போட்டோம் என்று முதல் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளை காப்பாற்ற பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>** - இல்லை

ஒம்/- கார்த்திக்

Taken down by me in Open Court read over ot the witness and to knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.